


# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## மானியக் கோரிக்கை எண். – 26

## அறிவிப்புகள்
## 2020 – 2021

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மானியக் கோரிக்கை எண். 26**

## அறிவிப்புகள்
## 2020 – 2021

**ஓ. பன்னீர்செல்வம்**
துணை முதலமைச்சர்

## 1. சென்னையில் 92 குடியிருப்பு அலகுகள் ரூ.55.40 கோடி மதிப்பீட்டில் சுயநிதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

மக்களின் வீட்டுவசதித் தேவையினை நிறைவேற்றும் பொருட்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், சென்னையில் அண்ணா நகர் மற்றும் நந்தனம் ஆகிய இடங்களில் சுயநிதித் திட்டத்தின்கீழ் 92 குடியிருப்பு அலகுகள் ரூ.55.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 2. சென்னை நெற்குன்றத்தில் 570 குடியிருப்பு அலகுகள் ரூ.419.56 கோடி மதிப்பீட்டில் சுயநிதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

மக்களின் வீட்டுவசதித் தேவையினை நிறைவேற்றும் பொருட்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், சென்னை நெற்குன்றத்தில் சுயநிதித் திட்டத்தின்கீழ் 570 குடியிருப்பு அலகுகள் ரூ. 419.56 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 3. திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் ரூ.15.40 கோடி மதிப்பீட்டில் 286 மனைகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி, செவ்வாப்பேட்டை மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள தாம்பரம் ஆகிய இடங்களில் **286** மனைகள் ரூ.**15.40** கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

## 4. வேலூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் ரூ.5.56 கோடி மதிப்பீட்டில் 135 மனைகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** வேலூர் மாவட்டத்தில் உள்ள வாலாஜா மற்றும் நாமக்கல் மாவட்டத்திலுள்ள பள்ளிப்பாளையம் ஆகிய இடங்களில் 135 மனைகள் ரூ.5.56 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

5. சேலம், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் ரூ.19.16 கோடி மதிப்பீட்டில் 277 மனைகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** சேலம் மாவட்டத்தில் உள்ள எடப்பாடி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஒசூர், நாளிகாபேட்டை அக்ரஹாரம் ஆகிய இடங்களில் 277 மனைகள் ரூ.19.16 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

**6. மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள தத்தநேரி, எல்லிஸ் நகர் மற்றும் உச்சப்பட்டி ஆகிய இடங்களில் 13.44 கோடி மதிப்பீட்டில் 425 மனைகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள தத்தநேரி, எல்லிஸ் நகர் மற்றும் உச்சப்பட்டி ஆகிய இடங்களில் 13.44 கோடி மதிப்பீட்டில் 425 மனைகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

## 7. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2,102 மனைகள் ரூ.117.20 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** கோயம்புத்தூர் மாவட்டத்தில் வெள்ளக்கிணறு, விளாங்குறிச்சி மற்றும் பெரியநாயக்கன்பாளையம் ஆகிய இடங்களில் 2,102 மனைகள் ரூ. 117.20 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

**8. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 978 மனைகள் ரூ.36.16 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 978 மனைகள் ரூ.36.16 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

## 9. சென்னையில் பெசன்ட் நகர், திருவான்மியூர் மற்றும் சி.ஐ.டி நகர் ஆகிய இடங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ரூ.139.00 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும் பயன்படுத்த இயலா நிலையில் உள்ள, வாரியக் கட்டடங்களை இடித்து விட்டு, அதிக தரைப்பரப்புக் குறியீட்டுடன் சென்னையில் பெசன்ட் நகர், திருவான்மியூர் மற்றும் சி.ஐ.டி நகர் ஆகிய இடங்களில் வணிக வளாகம் ரூ.139.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

## 10. கோயம்புத்தூரில் உள்ள குறிச்சியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ரூ.13.74 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும் பயன்படுத்த இயலா நிலையில் உள்ள, வாரியக் கட்டடங்களை இடித்து விட்டு, அதிக தரைப்பரப்புக் குறியீட்டுடன் கோயம்புத்தூரில் உள்ள குறிச்சியில் வணிக வளாகம் ரூ.13.74 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

## 11. திருச்சி வராகநேரியில் சுயநிதித் திட்டத்தின் கீழ் ரூ.63.50 கோடி மதிப்பீட்டில் 180 குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

திருச்சி வராகநேரியில் சிதலமடைந்த நிலையில் உள்ள, 48 வாரிய வாடகைக் குடியிருப்புகளை இடித்து விட்டு **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** அதிக தரைப்பரப்புக் குறியீட்டுடன் சுயநிதித் திட்டத்தின்கீழ் 180 குடியிருப்புகள், ரூ.63.50 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

**12. பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டப்பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ஏற்படுத்தப்படும்.**

மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட குடிசைப்பகுதிகளற்ற நகரங்கள் திட்டத்தின்கீழ் **5.76** இலட்சம் தனி வீடுகள் பயனாளிகள் தாமாகவே கட்ட ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் தனி வீடுகள் அமைந்துள்ள திட்டப்பகுதிகளை நல்ல வாழ்விடமாக மேம்படுத்த, சாலைகள், தெரு மின்விளக்கு, குடிநீர்வசதி, மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ஏற்படுத்தப்படும்.

**13. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023, குடிசைப்பகுதிகளற்ற நகரங்கள் திட்டத்தின் கீழ் அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டத்தின் நிதி ஆதாரத்தைப் பயன்படுத்தி சென்னை மற்றும் இதர நகரங்களில் 10,758 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1131.51 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023, குடிசைப்பகுதிகளற்ற நகரங்கள் திட்டத்தின்கீழ் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டத்தின் நிதி ஆதாரத்தைப் பயன்படுத்தி சென்னை மற்றும் இதர நகரங்களில் 10,758 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1131.51 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படும்.

14. சென்னை திருமங்கலம் பகுதியில் 0.40 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 20.00 கோடி மதிப்பீட்டில் 50,000 சதுர அடி கொண்ட வணிக வளாகம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும் சென்னையின் பிரதான இடமான திருமங்கலத்தில் 0.40 ஏக்கர் நிலப்பரப்பில் 50,000 சதுர அடி கொண்ட வணிக வளாகம் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்படும்.

# கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்

## 15. 2020–2021–ஆம் ஆண்டில் தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் ரூ.150 கோடி கடன் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும் 2020–2021– ஆம் ஆண்டு தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் ரூ.150 கோடி கடன் வழங்கப்படும்.

## 16. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும் பொருட்டு இரண்டு மண்டல அலுவலகங்கள் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் துவங்கப்படும்.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும் பொருட்டு **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** இரண்டு மண்டல அலுவலகங்கள் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் துவங்கப்படும்

## 17. சென்னை குன்றத்தூரில் 52 ஏக்கர் பரப்பளவில், மனைப்பிரிவுத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** வாங்கத்தக்க விலையில் வீட்டுமனை விற்பனை செய்யும் பொருட்டு, சென்னைப் பெருநகர கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலம், சென்னை குன்றத்தூரில் 52 ஏக்கர் பரப்பளவில் ஒரு மனைப்பிரிவுத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

## 18. சென்னை பூவிருந்தவல்லியில் 8 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவுத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** வாங்கத்தக்க விலையில் வீட்டுமனை விற்பனை செய்யும் பொருட்டு, சென்னை நகர கூட்டுறவு கட்டடச் சங்கத்தின் மூலம் சென்னை பூவிருந்தவல்லி அருகில் பிடாரிதாங்கல் கிராமத்தில் 8 ஏக்கர் பரப்பளவில் ஒரு மனைப்பிரிவுத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

## 19. சென்னை பெருங்களத்தூரில் 28.20 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவுத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும் வாங்கத்தக்க விலையில் வீட்டுமனை விற்பனை செய்யும் பொருட்டு, தென்சென்னை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலம் பெருங்களத்தூர் அருகே நெடுங்குன்றம் கிராமத்தில் 28.20 ஏக்கர் பரப்பளவில் ஒரு மனைப்பிரிவுத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

# நகர் ஊரமைப்பு இயக்ககம்

## 20. நகர் ஊரமைப்புத் துறையால் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் 75 முழுமைத் திட்டங்கள் மறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும் திட்ட காலம் முடிவடைந்த 75 முழுமைத் திட்டங்கள் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் மறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

## 21. திருப்பத்தூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய தனித்த உள்ளூர் திட்டப் பகுதிகள், கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக மாற்றப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** திருப்பத்தூர் மற்றும் ராணிப்பேட்டை தனித்த உள்ளூர் திட்டப் பகுதிகள், கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக மாற்றப்படும்.

## 22. தென்காசி மற்றும் தேனி ஆகிய தனித்த உள்ளூர் திட்டப் பகுதிகள், கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக மாற்றப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** தென்காசி மற்றும் தேனி ஆகிய தனித்த உள்ளூர் திட்டப் பகுதிகள், கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக மாற்றப்படும்.

## 23. புவிசார் தகவலமைப்பு (GIS) ஆய்வகம், ரூ.1.00 கோடி செலவில் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும நிதியின் மூலம் உருவாக்கப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** தலைமை அலுவலகத்தில், புவிசார் தகவலமைப்பு (GIS) ஆய்வகம், ரூ.1.00 கோடி செலவில் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும நிதியின் மூலம் உருவாக்கப்படும்.

**24. நகர் ஊரமைப்புத் துறையின் 5 மாவட்ட அலுவலகங்களான புதுக்கோட்டை, விருதுநகர், தேனி, நீலகிரி, நாமக்கல் ஆகியவற்றிற்கு ரூ.35 இலட்சம் செலவில் புதிய வாகனங்கள் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** புதிதாக அமையவுள்ள 5 மாவட்ட அலுவலகங்களான புதுக்கோட்டை, விருதுநகர், தேனி, நீலகிரி, நாமக்கல் ஆகியவற்றிற்கு மொத்தம் ரூ.35 இலட்சம் செலவில் புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

## 25. மாநில முழுமைக்கும் திட்ட அனுமதி வழங்க ஒற்றைச் சாளர (Single Window) நிகழ்நிலை வசதி உருவாக்கப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** பொது மக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து உள்ளாட்சிகள் மற்றும் தொடர்புடைய துறைகளை ஒருங்கிணைத்து திட்ட அனுமதி வழங்க தமிழ்நாடு இ–சேவை முகமை மூலமாக ஒற்றைச் சாளர நிகழ்நிலை வசதி உருவாக்கப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**26. கோயம்பேடு மொத்த அங்காடி வளாகத்திற்குள் 20,000 சதுர அடி பரப்பளவு கொண்ட காலியிடத்தில் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதி கொண்ட பன்மட்ட வாகன நிறுத்துமிடம் உருவாக்கப்படும்.**

கோயம்பேடு மொத்த அங்காடி வளாகத்திற்குள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அங்காடி நிர்வாகக் குழு அலுவலகத்தை ஒட்டியுள்ள சுமார் 20,000 சதுரடி பரப்பளவு கொண்ட காலியிடத்தில் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதி கொண்ட பன்மட்ட வாகன நிறுத்துமிடம் உருவாக்கப்படும்.

## 27. வெளிவட்டச் சாலையின் திறனை முழு அளவில் பயன்படுத்த ஏதுவாக வெளிவட்ட சாலையை ஒட்டியுள்ள 50மீ. அகல விரிவு நிலப் பகுதி மேம்படுத்தப்படும்.

வெளிவட்டச் சாலையை ஒட்டியுள்ள 50மீ. விரிவுப்பகுதியில் முறையான வளர்ச்சியை ஊக்குவிக்க ஏதுவாக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்** முதலுதவி மையங்கள், சாலையோர வசதிகள், தொழிற்பயிற்சி மையங்கள், தோட்டக்கலை பூங்காக்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்தி வெளிவட்டச் சாலையை ஒட்டியுள்ள 50மீ. அகல விரிவு நிலப் பகுதி மேம்படுத்தப்படும்.

**ஓ. பன்னீர்செல்வம்**
துணை முதலமைச்சர்